ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அலுவலகத்தை ஈரோடு சோலார் ரவுன்டானா பகுதியில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து இந்தப் புதிய அலுவலகத்தில் இருந்து ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி மக்களுக்காக தொண்டாற்றவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் பணி சிறக்கட்டும் என்று வாழ்த்தினார். அதுபோது அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், மருத்துவர் மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ் மற்றும் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், சட்டமன்ற உறுப்பினர், கழக முன்னணியினர் உடனிருந்தனர்.

திருவள்ளூர் - மணவாள நகரில்

பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டி - சீருடைகள்!

அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்! திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர் ஆக. 03- திருவள்ளூர் அடுத்த மணவாள நகரில் உள்ள கே.இ.என்.சி. அரசு மேல்நிலைப் பள்ளியில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சீருடை மற்றும் மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் த.பிரபுசங்கர் தலைமை தாங்கினார்.

மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், ஒன்றிய செயலாளர் க.அரிகிருஷ்ணன், நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், ஊராட்சி தலைவர் ஆர்.மோகனசுந்தரம், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் நடராஜன், தாடி என். நந்தகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் எஸ்.ஞானசேகரன், உதவி தலைமை ஆசிரியர்கள் பிரபாகரன், சரளா, வசந்தி ஆகியோர் வரவேற்றனர்.

விழாவில் அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு பள்ளி சீருடை மற்றும் விலையில்லா மிதி வண்டிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு அரசு மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்குவதற்கு காரணம் நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 17,391 மாணவ, மாணவியர்களுக்கு கிட்டத்தட்ட ரூ.8 கோடியே 38 லட்சத்து 51 ஆயிரத்து 460 மதிப்பிலான நிதி வங்கிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு முதல் கட்டமாக இன்று மணவாள நகரில் உள்ள கே.இ.என்.சி. அரசு மேல்நிலைப்பள்ளியில் 11-ஆம் வகுப்பு பயிலும் 308 மாணவ, மாணவியர்களுக்கு இந்த மிதிவண்டி வழங்குவதாக தெரிவித்தார்.

மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1-ம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சமூக நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலமாக ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் 4 செட் சீருடைகள் தைத்து வழங்கப்படுகிறது. எனவே மாணவர்கள் இதனை பயன்படுத்திக் கொண்டு நல்ல முறையில் படித்து வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம், வி.எஸ்.நேதாஜி, பொன்.பாண்டியன், ஆர். ராஜேந்திரகுமார், ஆசிரியர் ச.அருணன், கே.ஏ.மதியழகன், கொப்பூர் டி.திலீப் குமார், மெய்யழகன், சி. ஆர்.குமரன், டில்லி, ஏ.எஸ். மணி, திராவிட மணி, ராமதாஸ், பெருமாள், வாசு, காஞ்சிப்பாடி சரவணன், விழா குழுவினர் ஆனந்த், டென்னிசன் செல்வகுமார், ஹரிபாபு, மாலதி, ரேவதி, நித்யா, பிரியா, பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் சங்கீதா, ஏ.வி.ஷீபா, நீலகண்டன் கருணாநிதி, ராஜேஸ்வரி, ரேகா, பவித்ரா, கே.எஸ்.சங்கீதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்தை சேர்ந்த நாடுகளின் நிறுவனங்கள்

இந்திய நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஆக.3 ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்தை சேர்ந்த நாடுகளின் நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என மக்களவையில் எழுத்துப்பூர்வமான பதில்களுக்காக கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் பின்வருமாறு:-

வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தின் (TEPA) கீழ் ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம் (EFTA) நாடுகள் தங்கள் $100 பில்லியன் வெளிநாட்டு நேரடி முதலீட்டு (FDI) உறுதிப்பாட்டை எந்த அளவிற்கு பூர்த்தி செய்கின்றன என்பதை அமைச்சகம் எவ்வாறு உறுதி செய்கிறது, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம் முதலீட்டு உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறினால், சலுகைகளை திரும்பப் பெறுவதைக் கண்காணித்து நடைமுறைப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

100 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கும் எளிதாக்குவதற்கும் அமைச்சகத்திடம் எந்த அளவிற்கு முன்மொழிவுகள் உள்ளன மற்றும் அது நாட்டில் பத்து லட்சம் நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு பங்களிக்கிறதா என்பதை ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் எவ்வாறு உறுதிப்படுத்துகிறது என கேள்வி எழுப்பினார்.

ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத் நாடுகளின் நிறுவனங்களுடன் இந்திய நிறுவனங்களுக்கு கூட்டாண்மைகளை உருவாக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

சர்வதேச வர்த்தக உறவுகளைப் பேணுவதற்காக, இந்திய மசாலா ஏற்றுமதியில் உள்ள தரத் தரங்கள் மற்றும் மாசுப் பிரச்சினைகளை அமைச்சகம் எவ்வாறு கையாள்கிறது; மற்றும் இந்தியா - இங்கிலாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின்படி தற்போதைய பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தும் முக்கிய தலைப்புகளின் விவரங்கள் மற்றும் புதிதாக ஆட்சியில் அமர்ந்துள்ள தொழிலாளர் கட்சி அரசாங்கத்துடன் அமைச்சகம் ஈடுபட திட்டமிட்டுள்ள விதம் என்ன என கேள்வி எழுப்பினார்?

குட்கா முறைகேடு தொடர்பான வழக்கில்

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களுக்கு சம்மன்!

செப்.9ல் ஆஜராக உத்தரவு!

சென்னை, ஆக. 3 - குட்கா முறைகேடு தொடர்பான வழக்கில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜய பாஸ்கர், பி.வி ரமணா, முன்னாள் டி.ஜி.பி. டி.கே. ராஜேந்திரன், காவல்துறை முன்னாள் ஆணையர் ஜார்ஜ், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட 27 பேர் செப்டம்பர் 9ம் தேதி நேரில் ஆஜராக சென்னை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழ்நாட்டில் தடையை மீறி அதிகாரிகளுக்கு லஞ்சம் அளித்து குட்கா பொருள்கள் விற்கப்பட்டதான புகாரில் டெல்லி சிபிஐ காவல்துறை 2017ம் ஆண்டு வழக்குப்பதிவு செய்து, வழக்கை விசாரித்து வருகிறது. இதில் மாதவ ராவ், சீனிவாசராவ், உமா சங்கர் குப்தா, உணவு பாதுகாப்புத்துறை அதிகாரி செந்தில்முருகன், மத்திய கலால்துறை அதிகாரி நவநீத கிருஷ்ண பாண்டியன், சுகாதாரத்துறை அதிகாரி சிவக்குமார் ஆகிய 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்த சிபிஐ, இவர்களுக்கு எதிராக சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர்கள் சி. விஜயபாஸ்கர், பி.வி. ரமணா, சென்னை முன்னாள் போலீஸ் கமிஷனர் உள்ளிட்ட 21 மத்திய, மாநில அரசு உயர் அதிகாரிகளுக்கு எதிராக கூடுதல் குற்றப்பத்திரிகையை சிபிஐ கடந்த மே மாதம் தாக்கல் செய்தது.

இந்த வழக்கு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் இருந்து சென்னையில் உள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் அண்மையில் மாற்றம் செய்யப்பட்டது.

இதையடுத்து எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சி.சஞ்சய் பாபா அமர்வு முன் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இருந்த 5 பேர் ஆஜராகி இருந்தார்கள். இதை யடுத்து வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் சி.விஜய பாஸ்கர், பி.வி. ரமணா, முன்னாள் டி.ஜி.பி. டி.கே.ராஜேந்திரன், முன்னாள் காவல் ஆணையர் ஜார்ஜ், ஒன்றிய, மாநில அதிகாரிகள் என 27 பேரும் செப்டம்பர் 9ம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என்று சம்மன் அனுப்பி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

முதல்வர் வழிகாட்டுதல் படி ரூ.1 கோடியில் புனரமைக்கப்படும்

128-வது வார்டு விருகம்பாக்கம் மாநகராட்சிப் பள்ளிகளில் ஆய்வு!

ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. - ரத்னா லோகேஷ்வரன் எம்.சி. நேரில் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினர்!

சென்னை, ஆக.03- சென்னை 128வது வார்டு விருகம்பாக்கத்தில் முதல்வரின் வழிகாட்டுதலின்படி ரூ.1 கோடியில் புனர மைக்கப்படும் மாநகராட்சிப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரனும் ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதப்படுத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டிதலின்படி பெருநகர சென்னை மாநகராட்சி 128வது வார்டு, விருகம்பாக்கம், பள்ளிக் கூடத் தெருவில் இயங்கிவரும் சென்னை மாநகராட்சிப் பள்ளியை புனரமைக்க ரூ.1 கோடியில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜாவும், 128வது வார்டின் மாமன்ற உறுப்பினருமான ரத்னா லோகேஷ்வரனும் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக முடிக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

மாணவர்கள் பயன்பெறும் வகையில் 3 புதிய ஸ்மார்ட் வகுப்பறைகள் (Smart Class) புதிய மிதிவண்டி நிறுத்தம், புதிய கழிவறைகள், வளாகம் முழுவதும் புதிதாக வர்ணம் பூசுதல், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு குழாய்கள் புனரமைத்தல், உடைந்த கதவு, ஜன்னல் உள்ளிட்டவற்றை புதியாதாக மாற்றியமைத்தல் மேலும் புதிதாக பள்ளியின் நுழைவாயில் வளைவு உள்ளிட்ட புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ணா நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி விளையாட்டு திடலில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் ஆய்வு செய்த பொதுமக்களின் கருத்துக்களை சட்டமன்ற உறுப்பினரும், மாமன்ற உறுப்பினரும் கேட்டறிந்தனர். அப்பகுதியல் இயங்கி வரும் அங்கன்வாடி பள்ளியில் ஆய்வு செய்து குழந்தைளுக்கு தேவையான வசதிகளை உடனடியாக செய்து கொடுக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

ஜெயின்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் கோரிக்கையின் பேரில் குடியிருப்பை ஆய்வு செய்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக கூறினார்கள்.

சென்னை 128வது வார்டு விருகம்பாக்கத்தில் முதல்வரின் வழிகாட்டுதலின்படி ரூ.1 கோடியில் புனரமைக்கப்படும் மாநகராட்சிப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதப்படுத்தினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சைதை கா. கிட்டு

ஆகஸ்ட் 3 (2011)



இளம்வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, சைதை தொகுதி 139வது வட்டத்தில் சார்புமன்ற செயலாளராகப் பொறுப்பேற்று, பின்னர் படிப்படியாக வட்டப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், பகுதிக் கழகப் பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களை வகித்ததோடு, 1991 முதல் 2003ஆம் ஆண்டு வரை தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

1996ல் சைதை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, சிறப்பாக பணியாற்றி அத்தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 'சைதை கிட்டு – செயலில் சிட்டு' என்று பாராட்டப்பட்டதோடு, "சைதைத் தொகுதியில் நான் நிற்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களால் கட்டளையிடப்பட்டபோது, இங்கே நான் நிற்கிறேனா – சைதை கிட்டு நிற்கிறாரா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு அரும்பணியாற்றியவர் தம்பி கிட்டு" என தலைவர் கலைஞர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியம்

பொன்.கெங்காதரன் படத்திறப்பு!

கழக முன்னணியினர் பங்கேற்பு!

வேலூர், ஆக. 3- வேலூர் மாவட்டம் கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியம் கெம்மங்குப்பத்தில் நாளை (4.8.2024 -ஞாயிற்றுக் கிழமை) காலை 10.30 மணியளவில், மறைந்த பொன் கொங்கன் (எ) கெங்கா தரன் அவர்களின் திருவுருவப்படத் திறப்பும் அவருக்கான புகழஞ்சலி நிகழ்வும் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணைச் செயலாளர் சி.கோபி தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்விற்கு ம. வீராசாமி, சி. பாண்டியன், சி. மார்கபந்து, பெ. இரவி, சி, கோகிலன் முன்னிலை வகிக்க, இரா.சத்தியநாதன், சி.இமேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கவிஞர் ரகசியன் இரங்கற்பா வாசிக்கின்றார்.

மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன் படத்தை திறந்து வைக்கிறார்.

புகழஞ்சலியை ஒன்றியக் குழு பெருந்தலைவரும் கீ.வ.குப்பம் மத்திய கழக செயலாளருமான லோ.இரவிச்சந்திரன், கீ. வ.குப்பம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் இரா முருகேசனும் உரை பேசுகிறார்கள். வி.சி.க நாடாளுமன்ற தொகுதி செயலாளர் சிவ. செல்லபாண்டியன், மாநில குடியரசுக் கட்சியின் தலைவர் ஆம்பூர் பி. ஏகாம்பரம், ஊர் நாட்டாண்மை இரா.பாலசுந்தரம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.கே.ஆர்.சுந்தரவடி வேலு, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கே.தயாளமூர்த்தி விடி.சிவகுமார், மகாதேவமலை அறங்காவல் குழுத்தலைவர் விடி. ஜெயக்குமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா.பரிமளம், வெ.ஜெயராஜ், மாவட்ட கவுன்சிலர், ஒன்றிய அவைத்தலைவர் எம். அசோக்குமார், மாவட்ட நட்பு கழக செயலாளர் சா.குமரன் ஆகியோர் பேசுகின்றனர்.

ஏ.ஏழ்மைநாதன், நளினி ராமமூர்த்தி, கட்டுகல் பாஸ்கர், கோ.இளங்கோ, சி.மார்கபந்து, கே.புதூர் வெங்கடேசன், கு.குப்பன், தங்க வயல் தவசீலன், க.யுவராஜ், து.உதயன், சி.வீரப்பன், சு.பாலகிருஷ்ணன், பி. நெப்போலியன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஏற்புரையை, பொன் கெங்கன் மனைவி திருமதி கெ.புஷ்பா, மகன்கள் கெ. அருள், கெ.இராம லிங்கம், கெ.அறிவுடை நம்பி, கெ. இராம கிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்துகின்றனர். இந்த நிகழ்விற்கான ஏற்பாட்டினை, முரசொலி மன்றம் (ம) தி.மு.க. கிளை கழகங்கள் கெம்மங்குப்பம் (கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம்) ஒருங்கிணைப்பில் நடைபெறுகிறது.